மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் நாள் வியாழக்கிழமை

இ.ம.எண்: 10/2021

இல்

இ.ம.எண்: 02/2019

இல்

நி.ம.எண். 16/2015

இல்

அ.வ.எண்,75/2001

1. பழனியப்பன் (இறந்துவிட்டார்)
2. சின்னதாயி
3. பழனியப்பன்
4. செல்லகண்ணு
5. சித்தையன்
6. பழனியம்மாள்
7. மாதையன்
8. மாரிமுத்து . . . மனுதாரர்கள்/தீர்ப்புபெற்றவர்கள்

/எதிராக/

1. மாரியண்ணன்
2. பழனிப்பன் (இறந்துவிட்டார்)
3. முத்து
4. பெரியண்ணன்
5. தாண்டவன்
6. மாதையன்
7. மாரியப்பன் (இறந்துவிட்டார்)
8. மோகன்
9. அண்ணாமலை
10. செல்லம்மாள்
11. செல்வராஜ்
12. மாரியம்மாள்
13. பார்வதி
14. பழனிகவுண்டர்
15. வெங்கடாசலம்
16. மாராக்காள்
17. பழனியம்மாள்
18. பெரியம்மாள்
19. பூங்கொடி . . . எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பு கடனாளிகள்

20. மாரியம்மாள்
21. தாண்டவன்
22. கோவிந்தம்மாள் . . . எதிர்மனுதாரர்கள்/உத்தேச தரப்பினர்கள்

இம்மனு கடந்த 09.11.2021 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.பாலமுருகன் அவர்கள் ஆஜராகியும், 1, 3 முதல் 6, 8, 10 முதல் 12, 20 முதல் 22 ம்எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினர்களாக்கப்பட்டும், 2, 7, 14 ம்எதிர்மனுதாரர்கள் இறந்தவர்களாக்கப்பட்டும், 9, 13, 15 முதல் 19 ம்எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.D.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும் இது நாள்வரை எமது ஆய்வில் இருந்து வந்த மேற்படி மனுவினை பரிசீலனையில் எடுத்துக் கொண்டு இருதரப்பு சான்றாவணங்கள், சாட்சியங்கள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151 மற்றும் பிரிவு 153–ன் கீழ் இ.ம.எண்.02/2019 மனுவினை திருத்த அனுமதி கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>1) மனுவின் சுருக்கம்</u>

நிறைவேற்று மனு விசாரணை நிலுவையில் 14 ம்எதிர்மனுதாரரான பழனிகவுண்டர் 17.06.2020 ல் 20 முதல் 22 எதிர்மனுதாரர்களை வாரிசுகளாக விட்டு இறந்துவிட்டார். எனவே அவர்களை இம்மனுவில் கட்சி சேர்க்க கோரி இ.ம.எண்.07/2020 மனு 09.03.2021 ல் தாக்கல் செய்து, அம்மனு அனுமதிக்கப்பட்டது. எனவே அதன் தொடர்ச்சியாக இ.ம.எண்.02/2019 மனுவினை திருத்த அனுமதி கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>2) 9 ம்எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 13, 15 முதல் 19 ம் எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u>

மனுதாரர்கள் திருத்தப்பாட்டு மனுவினை இ.ம.எண்.10/2021 மனுவின் மூலம் தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுவில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151

வகைமுறையை மட்டுமே மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. ஏனெனில் நிறைவேற்று மனுவிற்கென்று சி.பி.சி. மற்றும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பு வழிச்சட்டத்திலும் தனியான வகைமுறையை வகுத்துள்ளபோது இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டிதாகும். எனவே மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 9, 13, 15 முதல் 19 ம் எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, ஆவணச் சாட்சியங்களோ எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள் தரப்பில் நிறைவேற்று மனு விசாரணை நிலுவையில் 14 ம்எதிர்மனுதாரரான பழனிகவுண்டர் 17.06.2020 ல் 20 முதல் 22 எதிர்மனுதாரர்களை வாரிசுகளாக விட்டு இறந்துவிட்டார் எனவும் எனவே அவர்களை இம்மனுவில் கட்சி சேர்க்க கோரி இ.ம.எண்.07/2020 மனு 09.03.2021 ல் தாக்கல் செய்து, அம்மனு அனுமதிக்கப்பட்டது எனவும், எனவே அதன் தொடர்ச்சியாக இ.ம.எண்.02/2019 மனுவினை திருத்த அனுமதி கோரி மனுதாரர்கள் மனு தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) 9, 13, 15 முதல் 19 ம்எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள் திருத்தப்பாட்டு மனுவினை இ.ம.எண்.10/2021 மனுவின் மூலம் தாக்கல் செய்துள்ளார் எனவும், மேற்படி மனுவில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151 வகைமுறையை மட்டுமே மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ளது எனவும் மேற்படி மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல எனவும், ஏனெனில் நிறைவேற்று மனுவிற்கென்று சி.பி.சி.

மற்றும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பு வழிச்சட்டத்திலும் தனியான வகைமுறையை வகுத்துள்ளது எனவும், எனவே மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 9, 13, 15 முதல் 19ம் எதிர்மனுதாரர்கள் கட்சி செய்துள்ளது தெரியவருகிறது.

(iii) சட்டப்பிரிவு தவறு என்பதால் மனுவை தள்ளுபடி செய்யக்கூடாது என்பதும், அதில் கூறியுள்ள பரிகாரத்தின் அடிப்படையில் அம்மனுவை முடிவு செய்யலாம் என்பதால் எதிர்மனுதாரர்கள் தரப்பில் முன்னிலைப்படுத்திய கட்சி ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. இந்நிலையில் 14ம் எதிர்மனுதாரரின் வாரிசுகளை சேர்க்க கோரிய மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.07/20 அனுமதிக்கப்பட்டதன் தொடர்ச்சியாக இ.ம.எண்.02/2019 மனுவினை திருத்த இம்மனு தாக்கல் செய்துள்ளதால் இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை</u>

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை</u>

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.